26.02.2026 OS.No.177/2021 PW2 Name :.**சின்னராஜ்**

குறுக்கு விசாரணை

1. சியாமளா சொல்லிதான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள ஆவணத்தை நான் பார்த்தது கிடையாது. சியாமளா என்னுடைய ஒரே ஊர்காரர். நானும் சியாமாளும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள். ரவியும் பிரதிவாதியும் வேறு சமூகத்தை சார்ந்தவர்கள். வழக்கு சொத்தை ரவிதான் சம்பாதித்துள்ளார். டீ கடை சண்முகத்திடம் அந்த சொத்தை வாங்கியுள்ளார். அந்த பத்திரம் பதிவாகியுள்ளது அதை நான் பார்த்துள்ளேன். முதன்மை சாட்சியத்தில் வழக்கு சொத்து பாப்பாம்மாளுக்கு சொந்தமானது என கூறியுள்ளது தவறாகும்.
2. பாப்பாம்மாள் யார்யாரிடம் கடன் வாங்கியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. திம்மாம்பேட்டை தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தில் பாப்பாம்மாள் கடன் வாங்கியது பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது. நான் சாட்சி கூறும் வழக்கு சொத்து காலியிடத்திற்கு ஆனது ஆகும். அதில் வீடு தண்ணீர் இணைப்பு எதுவும் இல்லை. தாவா சொத்தில் உள்ள வீடு தண்ணீர் இணைப்பிற்கு வரி கட்டபட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. 12.04.2013ல் ரவியும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு பத்திரம் செய்து கொடுத்ததாக நான் முதன்மை சாட்சியத்தில் கூறவில்லை.
3. வழக்கு சொத்து குறித்து விஜயகுமாரி பெயரில் பத்திரம் ஆகியுள்ளது தெரியும். 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தை 3ம் பிரதிவாதிக்கு பத்திரம் செய்தது தெரியும். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் எனக்கு

தெரியாது. திருத்தல் பத்திரம் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. சொத்து தொடர்பான பிரச்சனை ரவி இறந்த பின்னர்தான் ஏற்பட்டுள்ளது. தாவா சொத்து 3ம் பிரதிவாதி சுவாதீனத்தில் தற்போது உள்ளது என்றால் யாருடைய சுவாதீனத்திலும் இல்லை.

4. நான் 2021ல் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதில் பற்றிய விவரம் தெரியாது. ரவிக்கும் ஆனந்தி என்பவருக்கும் திருமணம் ஆகி அவர்கள் பிரிந்துவிட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. ரவியுடன் பிறந்த சகோதரிகள் மதுரா, மகேந்திரா மற்றும் வேண்டாமணி என்பது தெரியும். சியாமளா பரந்தாமன் என்பவருடன் திருமணம் செய்துள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. சீதா, மணி ஆகியோர்கள் பரந்தாமனின் வாரிசுகள் என்றால் இல்லை.

5. ரவி இறக்கும்வரை நாங்கள் வசிக்கும் பாட்டுரில் தான் வசித்து வந்தார். வழக்கு சொத்து உள்ள ஊரில் பிரதிவாதிகள் குடியிருக்கிறார்கள். வழக்கு சொத்தை ஒட்டி பிரதிவாதிகளுக்கு சொந்தமான வீடு உள்ளது. அந்த வீடு பற்றிய விவரம் எனக்கு தெரியாது. சியாமளாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 26/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.26 16:11:34 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.